புதுச்சேரி கடற்கரை பூங்கா செயற்கை நீர்வீழ்ச்சியை சீரமைத்தது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

நிறுவனர் நாளில் குத்துவிளக்கேற்றினார் ரவிசங்கர் சாஹூ

சென்னை, பிப் 13—

புதுச்சேரி கடற்கரையில் உள்ள ஜப்பானிய பூங்கா என்றும் அழைக்கப்படும் செயற்கை நீர்வீழ்ச்சி, கடந்த 6 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்தது. புதுச்சேரி நகராட்சி ஆணையர் ஆய்வு செய்து, அதை சீரமைத்து நடவடிக்கை எடுத்துள்ளார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சமூக நல திட்ட நிதியுதவியால் புதுப்பிக்கப்பட்டு நீம்வீழ்ச்சி செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

மோட்டார் பம்புகளை மாற்றியமைத்தல் மற்றும் அதன் பராமரிப்பு, நீருற்று பகுதியில் உள்ள தாவரங்களை சுத்தம் செய்தல் மற்றும் வகைப்படுத்துதல், உயர் தெளிவுத்திறன் கொண்ட எல்இடி விளக்குகள் மாற்றுதல், புதிய மின் இணைப்புப் பணிகள், நீரூற்றுக்குநீர் செல்லும் குடிமராமத்து பணிகள் ஆகியவை ஐஓபியின் நிதியுதவி மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

பொதுப்பணித்துறை அமைச்சர் கே.லட்சுமிநாராயணன் இதை திறந்து வைத்தார். புனரமைப்புப் பணிகள் காரணமாக தற்போது

செயற்கை நீர்வீழ்ச்சி வண்ண விளக்குகளால் ஜொலிப்பதாகவும், சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கும், புகைப்படங்கள் எடுப்பதற்கும், மாலையில்சிறிது நேரம் செலவிடுவதற்கும் மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைத்து உள்ளது என்றும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

'லாடு' அமைப்பின் இயக்குனர் எஸ். சக்திவேல், எம்.கந்தசாமி, புதுச்சேரி நகராட்சி ஆணையர் கே.சிவபாலன், செயற்பொறியாளர், பழனிராஜா, உதவிப் பொறியாளர், புதுச்சேரி நகராட்சிப் பணியாளர்கள், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி புதுச்சேரி மண்டல அலுவலக முதன்மைமண்டல மேலாளர் ரவிசங்கர் சாஹூ, உதவி பொது மேலாளர் ஜே எபினேசர் சோபியா, ஐஓபி ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். புதுச்சேரி ஐஓபி மண்டல முதன்மை மேலாளர் ரவிசங்கர் சாஹூ பேசுகையில், புதுப்பிக்கப்பட்ட செயற்கை நீர்வீழ்ச்சி திறப்பு விழாவில் ஐஓபிவாடிக்கையாளர்கள், புரவலர்கள் பங்குதாரர்கள், பணியாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் மற்றும் அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்த ஐஓபியை நம்பிய அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

ஐஓபி நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறது, தேசிய வளர்ச்சியை டிஜிட்டல்முறையில், உள்ளடக்கியதாக, மற்றும் நிலையான வங்கித் தீர்வுகளை இயக்குகிறது என குறிப்பிட்டுள்ளார்.

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே 22ந் தேதி ஸ்டாலின் தலைமையில் `பெற்றோரை கொண்டாடுவோம்' மாநாடு

முன்னேற்பாடு பணி: அமைச்சர்கள் அன்பில் மகேஸ், கணேசன் ஆய்வு

கடலூர், பிப்.13—

கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம், திருப்பெயர் கிராமத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில்முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமையில் பெற்றோரை கொண்டாடுவோம் மாநாடு வருகிற 22ந் தேதி நடக்கிறது. இதற்கான முன்னேற்பாடு பணிகளை நேற்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது மாநாட்டிற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரக்கூடிய வாகனங்களுக்கான வாகன நிறுத்தம் ஏற்பாடு செய்வது, நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களுக்கான இருக்கைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்து பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். இந்த நிகழ்ச்சி 6 மண்டலங்களில் சிறப்பாக நடத்தப்பட்டு, தற்போது 7வது மண்டல மாநாடாக கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே உள்ள திருப்பெயர் பகுதியில் நடைபெற உள்ளது. கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 7 மாவட்டங்களை ஒருங்கிணைத்து கடலூர் மண்டல பெற்றோர் ஆசிரியர் கழக மாநாடு நடைபெற உள்ளது.

முன்னேற்பாட்டுப் பணிகள் ஆய்வின்போது மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா, முதன்மை கல்வி அலுவலர்எல்லப்பன், கோட்டாட்சியர் சையத் மெஹ்முத், ஊராட்சிகள் உதவி இயக்குனர் முருகன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

ஸ்ரீ பெரும்புதூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்ஜினியரிங் கல்லூரியில் மாணவர்களுக்கு இடையிலான தேசிய தொழில்நுட்ப அறிவு – சவால் தீர்வு போட்டி

சென்னை, பிப் 13—

தேசிய அளவிலான கல்லூரி களுக்கிடையேயான தொழில்நுட்ப நிகழ்வான iCUBE 4.0 ன் 2வது பதிப்பு நடைபெற்றது. இது "எதிர்காலத்தை வடிவமைத்தல்: ஒரு சிறந்த உலகத்திற்கான புதுமைகள்" என்ற கருப்பொருளின் கீழ் சமூக சவாலை சமாளிக்க பங்கேற்பாளர்கள் தத்தம் கருத்து, யோசனை, தீர்வுகளை வெளியிட்டனர்.

கால்வனைஸ் குளோபல் எஜூகேஷன் இணை நிறுவனர் மற்றும் தலைமை அதிகாரி பவித்ரா ஸ்ரீனிவாசன், 'புதிய தலைமுறை' டிவியின் அரசியல் பிரிவு ஆசிரியர் ஜி. கார்த்திகேயன், எஸ்விஈஹெச்டியின் செயலாளர் பேராசிரியர் எம். சிவானந்தம் ஆகியோரின் தலைமையில் விழா தொடங்கியது. பயன்பாட்டு இயற்பியல் துறையின் இணைப் பேராசிரியர் டாக்டர் என். ஆர். ஷீலா உரையாற்றினார்.

விழாவில் சென்னை வெஸ்டாஸ் விண்ட் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் டைரக்டர் என்ஜினியரிங் விஷ்ணுபிரீன் கே.ஆர்., எஸ்விசிஈயின் முதல்வர் பேராசிரியர் எஸ். கணேஷ் வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரச்சனையை தீர்க்கும் பங்கேற்பாளர்களின் திறன்களைப் பாராட்டினர். ரூ.1,00,000 மதிப்புள்ள பரிசுத் தொகை வழங்கப்பட்டது கனெக்ட்இடி மற்றும் டி. மொசாம்பி அணிகள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர். சீட்–டு–சர்க்யூட் மற்றும் ஏடி_டி அணிகள் இரண்டாம் இடத்தைப் பிடித்தன. சிறப்பு விருதுகள் டீம் மோர்ஸ் மணிப்புல்ஸ் மற்றும் டீம் எடர்னல் பீனிக்ஸ் அணிகளுக்கு வழங்கப்பட்டன. நெல்லை இன்ஃபோடெக் மற்றும் நோவா ஏரோஸ்பேஸ் பிரைவேட் லிம் ஆகியவை சிறந்த அணிகளுக்கு இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை வழங்கின.

சிதம்பரம் நகராட்சியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23ன் கீழ் பொன்னம்பலம் நகர் பூங்கா புனரமைப்பு பணி மேற்கொள்ள ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் பூங்காவில் பேவர் பிளாக் நடைபாதை, சுற்றுசுவர். மண்நிரப்புதல், இருக்கை வசதிகள். சிறுவர் விளையாட்டு உபகரணங்களுடன் நகரமன்ற தலைவர் கே.ஆர்.செந்தில்குமார் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு நகராட்சி ஆணையார் த.மல்லிகா, பொறியாளர் எஸ்.சுரேஷ், பொதுப்பணி மேற்பார்வையாளர் கோ.ரம்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் நகரமன்ற துணைத் தலைவர் எம்.முத்துக்குமார், மூத்த நகர்மன்ற உறுப்பினர் ஆ.ரமேஷ், நகரமன்ற உறுப்பினர்கள் அப்பு சந் திரசேகரன், ஏ ஆர் சி மணிகண்டன், ரா.வெங்கடேசன், அசோகன், சரவணன், சுந்தரி சேகர், சுனிதா மாரியப்பன், லதா, கல்பனா சண்முகம், நகர இளைஞரணி அமைப்பாளர் மக்கள் அருள், நகர தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, நகர துணை செயலாளர்கள் பா.பாலசுப்பிரமணியன், ஆர். இளங்கோவன் உள்பட பலர் பங்கேற்றனர்.

சாயாஜி ஹோட்டல்ஸ் (புனே) லிமிடெட்

CIN:L55204TN2018P LC122599

பதிவு அலுவலகம்: எப்1, சி3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், கீழ்கட்டளை, காஞ்சிபுரம், தாம்பரம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா 600117, Tel. No. : 044-29871174 I Email Id : cs@shplpune.com I Website : www.shplpune.com |

தபால் வாக்கு மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு பற்றிய அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 110 மற்றும் 108, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 ("விதிகள்")–ன் விதிகள் 20 மற்றும் 22 உடன் எந்தத் திருத்தமும்(கள்) உட்பட மற்றும் திருத்தப்பட்ட செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதி 44 ("பட்டியல் விதிமுறைகள்") மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் ("எம்சிஏ) வெளியிடப்பட்ட ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.17/2020, ஜூன் 15, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 22/2020, செப்டம்பர் 28, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண்.33/2020, டிசம்பர் 31, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 39/2020 மற்றும் மே 5, 2022 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.3/2022, டிசம்பர் 28, 2022 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.11/2022, செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.09/2023 மற்றும் செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.9/2024, இந்திய நிறுவனச் செயலர்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட செயலகத் தரநிலைகள் - 2 மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஏதேனும் இருந்தால் ஆகியவற்றுக்கு இணங்க தொலைதூர மின்னணு வாக்களிப்பு ("தபால் வாக்குப்பதிவு/மின்னணு வாக்களிப்பு") முறையில் தபால் வாக்கு மூலம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்திற்கான ஒரு சிறப்பு தீர்மானத்திற்கு சாயாஜி ஹோட்டல்ஸ் (புனே) லிமிடெட் ("நிறுவனம்") உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.	சிறப்பு தீர்மானம் குறித்து விவரம்
1	நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 185ன் கீழ் எந்தவொரு கடனையும் முன் கூட்டியே செலுத்துதல் அல்லது உத்தரவாதம் அளிக்க அல்லது எந்தவொரு பாதுகாப்பையும் வழங்க ஒப்புதல் அளித்தல்.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பதாவது:

1. கட்ஆப் தேதியில் அதாவது பிப்ரவரி 10, 2025, திங்கட்கிழமை அன்று நிறுவனம்/ டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பிப்ரவரி 12, 2025, புதன்கிழமை அன்று மின்னஞ்சல் மூலம் தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பு அனுப்புவதை நிறுவனம் நிறைவு செய்துள்ளது. மேலும், மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தபால் வாக்குச்சீட்டுப் படிவம் மற்றும் முன்பணம் செலுத்திய வணிகப் பதிலுறை ஆகியவற்றுடன் தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பின் காகித நகல் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படவில்லை. எனவே, உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதல் அல்லது மறுப்பை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை மூலம் மட்டுமே தெரிவிக்க வேண்டும். தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்குவதற்காக, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) சேவைகளை நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது.
2. விளக்க அறிக்கையுடன் மேற்கூறிய அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளத்தில் (www.shplpune.com), நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தையின் இணையதளத்தில் அதாவது பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் மின்னணு வாக்களிக்கும் முகமையின் இணையதளத்தில், CDSL(www.cdslindia.com)ல் கிடைக்கிறது. மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள், மின்னணு முறையில் வாக்களிக்க மேற்குறிப்பிட்ட இணையதளங்களில் உள்ள தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பு குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
3. தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி மூலம் வாக்களிப்பதற்கான உறுப்பினர்கள் தகுதியைக் கண்டறியும் நோக்கத்திற்கான கட்ஆப் தேதி பிப்ரவரி 10, 2025 திங்கட்கிழமை ஆகும். கட் ஆப் தேதியில் நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் உள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியைப் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
4. தொலைதூர மின்னணு வாக்களிப்பு சனிக்கிழமை, பிப்ரவரி 15, 2025 அன்று காலை 9:00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 16, 2025 அன்று மாலை 5:00 மணிக்கு முடிவடையும் (இந்திய நேரப்படி). அதன்பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொகுதி CDSLஆல் முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீது ஒரு உறுப்பினர் வாக்களித்தவுடன், அவர்கள் அதை மாற்றவோ அல்லது மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான விரிவான நடைமுறை/வழிமுறைகள் தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. தபால் வாக்குப்பதிவு செயல்முறைகளை நடத்துவதற்கான ஆய்வாளராக திரு. நீலேஷ் குப்தா, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் M/s நீலேஷ் குப்தா அண்ட் கம்பெனி அவர்களை நிறுவனம் நியமித்துள்ளது.
6. ஏதேனும் கேள்விகள் இருந்தால், உறுப்பினர்கள் www.cdslindia.comன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் "பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)" மற்றும் "பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேடு" ஆகியவற்றைப் பார்க்கலாம் அல்லது நீங்கள் helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் எழுதலாம் அல்லது 1800 21 09911 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
7. தபால் வாக்கெடுப்பின் முடிவுகள், நிறுவனத்தின் இணையதளம் (www.shplpune.com) மற்றும் மின்னணு வாக்களிப்பு முகவரான CDSL (www.cdslindia.com)ல் வெளியிடுவதன் மூலம் அறிவிக்கப்படும். முடிவுகள் அதேசமயம் பங்குச் சந்தைகளுக்கும் தெரிவிக்கப்படும்.

சாயாஜி ஹோட்டல்ஸ் (புனே) லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
காஜல் ஜெயின்
நிறுவனச் செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

இடம்: இந்தூர்
தேதி: 12 பிப்ரவரி, 2025

சென்னை வியாசர்பாடி பாலதண்டாயுதபாணி கோயிலில் 63–ம் ஆண்டு தைப்பூச பெருவிழா

சென்னை, பிப்.13–

சென்னை வியாசர்பாடி சர்மா நகரில் அமைந்துள்ள பால தண்டாயுதபாணி கோயிலில் 63–ம் ஆண்டு தைப்பூச பெருவிழா இன்று அக்கோவிலின் அறங்காவலர் குழு தலைவரும் பால தண்டாயுதபாணி பக்த ஜன சபா நிறுவன தலைவருமான டாக்டர் ஏ.ஆர். தர்மலிங்கம் ஏற்பாட்டில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இன்று காலை வியாசை சாஸ்திரி நகரில் உள்ள வெற்றி விநாயகர் ஆலயத்தில் இருந்து ராணி சங்குபதி அம்மையார் தலைமையில் ஆண்கள் காவடி எடுத்தும் பெண்கள் பால் குடம் ஏந்தி ஊர்வலமாக வந்து முருகப்பெருமானின் சிலைக்கு பாலபிஷேகம் செய்தனர். இக்கோவிலை அப்பகுதி மக்கள் "வட திருச்செந்தூர்" என்று அழைக்கப்படுவது மேலும் ஒரு சிறப்பாகும்.

தைப்பூச திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிறப்பு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்கு 'க்யூ' வரிசை அமைக்கப்பட்டு சிரமம் இன்றி தரிசனம் செய்ய சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது.

மேலும் இவ்விழாவில் சென்னை மாநகராட்சி 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.மலைச்சாமி, பத்மாவதி, திருக்கோவில் எழுத்தர் எஸ்.தனசேகர் மற்றும் பால தண்டாயுதபாணி பக்த ஜனா சபா நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், விழா குழுவினர்கள், அன்னதான குழுவினர்கள், ஆன்மிக அன்பர்கள், பக்தர்கள், அப்பகுதி முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

OrchidPharma — A Dhanuka Group Company

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்

பதிவு அலுவலகம்: மனை எண்கள். 121 – 128, 128A – 133, 138 – 151, 159 –164, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஆலத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் 603110, தமிழ்நாடு, இந்தியா
Ph. +91 - 44 - 2744 4471 - 78 Email id: corporate@orchidpharma.com, cs@orchidpharma.com, Website: www.orchidpharma.com
CIN : L24222TN1992PLCO22994

டிசம்பர் 31, 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	தனியானது						ஒருங்கிணைந்தது					
		டிச.31, 2024–ல் முடிந்த காலாண்டு (தணிக்கை யாகாதது)	செப் 30, 2024–ல் முடிந்த காலாண்டு (தணிக்கை யாகாதது)	டிச.31, 2023–ல் முடிந்த காலாண்டு (தணிக்கை யாகாதது)	டிச.31, 2024–ல் முடிந்த இன்றைய தேதி வரையிலான கணக்குகள் (தணிக்கை யாகாதது)	டிச.31, 2023–ல் முடிந்த இன்றைய தேதி வரையிலான கணக்குகள் (தணிக்கை யாகாதது)	மார்ச் 31, 2024–ல் முடிந்த ஆண்டு (தணிக்கை யானது)	டிச.31, 2024–ல் முடிந்த காலாண்டு (தணிக்கை யாகாதது)	செப் 30, 2024–ல் முடிந்த காலாண்டு (தணிக்கை யாகாதது)	டிச.31, 2023–ல் முடிந்த காலாண்டு (தணிக்கை யாகாதது)	டிச.31, 2024–ல் முடிந்த இன்றைய தேதி வரையிலான கணக்குகள் (தணிக்கை யாகாதது)	டிச.31, 2023–ல் முடிந்த இன்றைய தேதி வரையிலான கணக்குகள் (தணிக்கை யாகாதது)	மார்ச் 31, 2024–ல் முடிந்த ஆண்டு (தணிக்கை யானது)
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய்	22727.97	23066.18	22802.73	71011.95	61977.06	84975.76	22583.25	23021.54	22820.66	70802.47	62012.29	85023.1
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	2390.63	2562.58	3054.57	7863.47	6156.25	9152.33	2245	2590.04	3019.25	7647.07	6099.14	9194.52
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	2390.63	2562.58	3054.57	7863.47	6156.25	9152.33	2245	2590.04	3019.25	7647.07	6099.14	9194.52
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	2390.63	2562.58	3054.57	7863.47	6156.25	9474.95	2245	2590.04	3019.25	7662.48	6099.14	9506.43
5	இதர விரிவான வருவாய் (நிகர வரி)	-80.14	-149.3	-64.7	-241.88	-194.09	-33.72	-80.14	-149.3	-64.7	-241.88	-194.09	-33.72
6	காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் [காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது]	2310.49	2413.28	2989.87	7621.59	5962.16	9441.23	1997.37	2574.35	2878.43	7494.34	5669.89	9182.93
7	சம பங்கு மூலதனம் (முகமதிப்பு ஒரு பங்கு ரூ.10)	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91	5071.91
8	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	0		116759.79	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது			111874.7
9	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)												
	அ. அடிப்படை	4.71	5.05	6.42	15.5	12.94	19.59	4.1	5.37	6.18	15.25	12.32	19.06
	ஆ. பலமிழந்தது	4.71	5.05	6.42	15.5	12.94	19.59	4.1	5.37	6.18	15.25	12.32	19.06

குறிப்பு:

1. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, கட்டுப்பாடு 33–ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31, 2024–ல் முடிந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த மற்றும் தனியான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. டிசம்பர் 31, 2024–ல் முடிந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த மற்றும் தனியான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ்சுகளான பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.orchidpharma.com–ல் உள்ளது.

இயக்குனர்கள் குழு சார்பாக
ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
மனிஷ் தனுகா
நிர்வாக இயக்குனர்
DIN: 00238798

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 12, 2025

ஐபி ரிங்ஸ் லிமிடெட்

(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)
பதிவு அலுவலகம் : D-11/12, தொழிற்பேட்டை, மறைமலை நகர் - 603 209.
CIN : L28920TN1991PLC020232
தொலைபேசி: 044-2745 2816 இமெயில்: iprmmn@iprings.com

டிசம்பர் 31, 2024 உடன் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(ரூ. லட்சத்தில், ஒரு பங்கிற்கான வருமானம் தவிர)

வ. எண்.	விபரங்கள்	தனியானது						ஒருங்கிணைந்தது					
		31.12.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு	30.09.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு	31.12.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு	31.12.2024 அன்றுடன் முடிவடைந்த ஒன்பது மாதம்	31.12.2023 அன்றுடன் முடிவடைந்த ஒன்பது மாதம்	31.03.2024 அன்றுடன் முடிவடைந்த ஆண்டு	31.12.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு	30.09.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு	31.12.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு	31.12.2024 அன்றுடன் முடிவடைந்த அரையாண்டு	31.12.2023 அன்றுடன் முடிவடைந்த அரையாண்டு	31.03.2024 அன்றுடன் முடிவடைந்த ஆண்டு
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	5,798.84	7,958.85	7,464.24	21,988.48	23,020.16	31,925.43	5,798.84	7,958.85	7,464.24	21,988.48	23,020.16	31,925.43
2	நிகர லாபம் / (நஷ்டம்) இக்காலகட்டத்தில் (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்)	(496.32)	(98.82)	(137.46)	(552.30)	(484.34)	(279.31)	(494.50)	(98.47)	(137.46)	(550.13)	(484.34)	(279.31)
3	நிகர லாபம் / (நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு முன் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்)	(496.32)	(98.82)	(137.46)	(552.30)	(484.34)	(279.31)	(533.44)	(119.30)	(133.14)	(626.02)	(480.07)	(329.09)
4	நிகர லாபம் / (நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்குப்பின் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்)	(356.04)	(76.09)	(94.71)	(403.12)	(417.94)	(273.14)	(393.16)	(96.57)	(90.39)	(476.84)	(413.67)	(322.92)
5	மொத்த விரிவான வருமானம் இக்காலகட்டத்தில் [இக்காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப்பின்) உள்ளடக்கியது]	(366.35)	(86.60)	(96.34)	(434.51)	(425.71)	(312.43)	(403.47)	(107.08)	(92.02)	(508.23)	(421.44)	(362.21)
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59
7	பிற சம பங்குங்கள்						9,391.82					9,333.35	
8	பங்கு ஒன்றிற்கு ஈட்டிய வருமானம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுக்காக)												
	அடிப்படை	(2.81)	(0.60)	(0.75)	(3.18)	(3.30)	(2.15)	(3.10)	(0.76)	(0.71)	(3.76)	(3.26)	(2.55)
	இளகியது	(2.81)	(0.60)	(0.75)	(3.18)	(3.30)	(2.15)	(3.10)	(0.76)	(0.71)	(3.76)	(3.26)	(2.55)

தனித்துள்ள குறிப்புகள்:

1. மேலே குறிப்பிட்டுள்ள தனித்துள்ள நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, அதன்பின் இயக்குநர் குழுவால் பிப்ரவரி 12, 2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவலானது மார்ச் 31, 2024 ஆண்டு முடிந்த தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகளிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயத்திற்கு (Ind AS) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. இந்த நிறுவனம் ஒரே ஒரு தொழில் பிரிவு மட்டுமே கொண்டுள்ளது, அதாவது பொருட்களின் தன்மை, இடர்கள், வரத்துகள் மற்றும் உள் வணிக அறிக்கை அமைப்பு சார்ந்து ஆட்டோ உபகரணங்கள் – பிஸ்டன் ரிங்ஸ், டிஃபரன்சியல் கியர்ஸ், போல் வீல் மற்றும் பிற டிரான்ஸ்மிஷன் பாகங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையாகும். நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு தலைமை செயல்பாட்டை முடிவு செய்பவராக (CODM) இருப்பதால் உள் வணிக அறிக்கை முறையை அடிப்படையாக கொண்டு இந்த நிறுவனத்தை ஒரே தொழில்பிரிவாக கருதி வள ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, Ind AS 108ன்படி (நடவடிக்கை பிரிவுகள்) இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான நிதிநிலை முடிவுகள் மும்பை பங்குச் சந்தையின் இணையதளத்திலும் (**URL: www.bseindia.com**), நிறுவனத்தின் இணையதளத்திலும் (**URL: www.iprings.com**) காணப்பெறலாம்.
4. முந்தைய கால இலக்கங்கள் இக்காலகட்டத்தோடு உறுதிசெய்யும் வண்ணம், தேவைப்படும் இடத்தில் ஒன்றுசேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுக்கப்பட்ட குறிப்புகள்:

1. மேலே குறிப்பிட்டுள்ள தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு அதன்பின் இயக்குநர் குழுவால் பிப்ரவரி 12, 2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவலானது மார்ச் 31, 2024 ஆண்டு முடிந்த தணிக்கை செய்யப்பட்ட தொகுக்கப்பட்ட நிதி நிலை முடிவுகளிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயத்திற்கு (Ind AS) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. இந்த நிறுவனத்தின் முக்கிய வணிகம் ஆட்டோ உதிரிபாகங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகும். இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. இந்த தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளில் பின்வரும் நிறுவனத்தின் முடிவுகள் அடங்கும்
   a. ஐபி ரிங்ஸ் லிமிடெட் ("the Company or "Parent")
   b. IPR எமினாக்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (Joint Venture)
   c. IPR நார்த் அமெரிக்கா Inc. (Subsidiary)
4. டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான நிதிநிலை முடிவுகள் மும்பை பங்குச் சந்தையின் இணையதளத்திலும் (**URL: www.bseindia.com**), நிறுவனத்தின் இணையதளத்திலும் (**URL: www.iprings.com**) காணப்பெறலாம்.
5. முந்தைய கால இலக்கங்கள் இக்காலகட்டத்தோடு உறுதிசெய்யும் வண்ணம், தேவைப்படும் இடத்தில் ஒன்றுசேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

இடம்: சென்னை
நாள் : 12 பிப்ரவரி, 2025

ஐபி ரிங்ஸ் லிமிடெட்டுக்காக
A. வெங்கடரமணி
நிர்வாக இயக்குனர்